MAALAI MALAR

DATE: 14.10.2023

PAGE NO: 02

# புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடி மாணவர் சேர்க்கை

புதுச்சேரி, அக்.14—

புதுவை பல்கலைக்கழகத்தில் முதுகலை, முதுகலை டிப்ளமோ பாடப்பிரிவில் காலியாக உள்ள இடங்களை கியூட் தேர்வு அடிப்படையில் நேரடி சேர்க்கை மூலம் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் உள்ள அந்தந்த துறைகளில் வருகிற 16—ந் தேதி முதல் 18—ந் தேதி வரை காலை 10 முதல் மதியம் 12 மணி வரை சேர்க்கை நடக்கிறது.

ஒவ்வொரு துறையிலும் காலியாக உள்ள இடங்கள் குறித்த விபரம் இணைய தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விருப்பமுள்ளவர்கள் அந்தந்த துறை தலைவர்களை நேரில் சந்தித்து சான்றிதழ் சமர்பித்து சேரலாம்.

கியூட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கலந்தாய்வுக்கு வரும்போது அனைத்து அசல், நகல் சான்றிதழ்களை கொண்டு வர வேண்டும் என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

DINAKARAN

PAGE NO: 16

DATE 14.10.2023

egn. No:PONTAM/2001/5373 Postal Regn. No.PY /69/2021-2023

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# காலி இடங்களை நேரடி சேர்க்கை மூலம் நிரப்ப முடிவு

**புதுச்சேரி, அக். 14:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2023-24ம் கல்வி ஆண்டு முதுகலை மற்றும் முதுகலை டிப்ளமோ பாடப்பிரிவில் காலியாக உள்ள இடங்களை கியூட் தேர்வின் முடிவு அடிப்படையில் நேரடி சேர்க்கை மூலம் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பல்கலைக்கழகத்தில் உள்ள அந்தந்த துறையில் வருகிற 16ம் தேதி முதல் 18ம் தேதி வரை காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடக்கிறது. ஒவ்வொரு துறையிலும் காலியாக உள்ள இடங்கள் குறித்த விவரம் பல்கலைக்கழக இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விருப்பமுள்ளவர்கள் நேரடியாக அந்தந்த துறை தலைவர்களிடம் சென்று சான்றிதழ்கள் சமர்ப்பித்து, அந்த பாடப்பிரிவில் சேர்ந்து கொள்ளலாம். கியூட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கலந்தாய்வுக்கு வரும்போது, அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை கொண்டு வர வேண்டும்.